# அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் பழங்குடியின மக்களின் கைவினை பொருள்கள் விற்பனைக்கான இணையதளம் துவக்கம்

கொடைக்கானல், மார்ச்.13–

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் உயிரி தொழில்நுட்பத் துறை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் இணைந்து நடத்திய இயற்கை பொருட்கள் மூலம் உருவாக்கிய ஆபரணங்கள், வீட்டு அலங்கார பொருட்கள் பயிற்சி திட்டத்தில் பழங்குடியினருக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒரு இணைய தளத்தையும் துவக்கி வைத்துள்ளனர்.இதன் மூலம் பழங்குடியின மக்கள் இடைத்தரகர்களின் மூலம் விற்பனை செய்யாமல் நேரடியாக இந்த இணைய தளத்தின் மூலம் விற்பனை செய்யலாம், மேலும் அவர்களுக்கான பணம் அவர்களுக்கே நேரடியாக கிடைக்கும் படி,இந்த இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதள துவக்கம் குறித்த நிகழ்ச்சி நேற்று அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் உள்ள கருத்தரங்கத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர், தேர்வுக் கட்டுப்பாட்டாளர், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்ற உறுப்பினர் செயலர், பேரா. முனைவர் S.வின்சென்ட் மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறை பேராசிரியர்கள், மாணவியர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவின் தொடக்கமாக வரவேற்புரையை உயிரி தொழில்நுட்பத் துறைத்தலைவர் முனைவர் உஷா ராஜ நந்தினி அவர்கள் வழங்கினார். பின்னர், துணைவேந்தர் முனைவர் K.கலா பழங்குடியின மக்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்களை பற்றி கூறி தலைமையுரை ஆற்றினார். இவ்விழாவின் முக்கிய நிகழ்வான இணையதள துவக்கம் பழையார், புழையார், கொடைக்கானல் பபுகொ(papuko) என்ற இணையதள முகவரி தொடங்கப்பட்டது. அடுத்ததாக உறுப்பினர் செயலர் முனைவர் S.வின்செட் அவர்கள் நம்முடைய படிப்பு மக்களுக்கு பயனளிப்பதாக அமைய வேண்டும் என்று தெளிவான கருத்துக்களைக்கூறி சிறப்பு விருந்தினர் உரை ஆற்றினார். அதன்பிறகு NABARD வங்கி மேலாளர் திரு.ஹரிஷ் அவர்கள் RtPCR யை கிராம மக்களுக்கு தெளிவாக விளக்கினார். தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் A.க்ளாரா தேன்மொழி அம்மா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அதன்பிறகு உயிரி தொழில்நுட்பத் துறை பேராசிரியர் முனைவர் M.ரசியா அவர்கள் நன்றியுரை வழங்கினார், விழா அரங்கிலேயே பொருட்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது, அதனைத் தொடர்ந்து பழங்குடியினரின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டது, இத்துடன் நிகழ்வு நிறைவடைந்தது.

# பழனியில் மத்திய அமைச்சர் உருவ பொம்மையை திமுகவினர் எரித்து போராட்டம்

பழனி, மார்ச்.13–

பழனி பஸ் நிலைய ரவுண்டானா முன்பு நகர திமுக செயலாளர் வேலுமணி தலைமையில், திமுகவினர் மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் உருவ படம் மற்றும் உருவ பொம்மையை எரித்தனர். அப்பொழுது அதை போலீசார் தண்ணீர் ஊற்றி அணைத்தனர். இதில் திமுகவினர் ஏ கே எம் சக்திவேல், சுரேஷ், செல்லப்பாண்டியன், நெசவாளர் அணி பாஸ்கரன், உட்பட ஏராள மானோர் பங்கேற்றனர்.

# மகளிர் தின விழா: வத்தலக்குண்டு ரோட்டரி சங்கத்தில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த 25 பெண்களுக்கு "தாரா விருதுகள்

வத்தலக்குண்டு, மார்ச்.13–

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம். உலகமெங்கும் பெண்களின், சாதனைகளை கொண்டாடும் இந்த நாளில், திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு ரோட்டரி சங்கம், பல்வேறு துறைகளில் சாதனை படைத்த, 25 பெண்களுக்கு "தாரா விருதுகள் 2025" வழங்கி சிறப்பித்துள்ளது.

"அனைத்து பெண்க ளுக்கும் சிறுமிகளுக்கும்: உரிமைகள். சமத்துவம். அதிகாரமளித்தல்" என்ற கருப்பொருளை மையமாக கொண்டு, வத்தலக்குண்டு ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்த, இந்த விழாவில், மருத்துவம், கல்வி, காவல்துறை, ஊடகம், விவசாயம், கலை, சமூகம் என பல்வேறு துறைகளில் சாதனை படைத்த, 25 பெண்களுக்கு தாரா விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த விழாவில், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட, முனைவர் பாத்திமா பேகம், கோயம்புத்தூர், மிஸ். கவிதா, மற்றும் மதுரை துணை ஆட்சியர், அனிதா ஆகியோர், விருதுகளை வழங்கி சாதனை பெண்களை கவுரவித்தனர். வத்தலகுண்டு ரோட்டரி சங்க தலைவர், மருத்துவர் யூசுப் மௌலானா, வரவேற்புரை ஆற்றினார். துணை ஆளுநர், மாதவன், வாழ்த்துரை வழங்கினார். செயலாளர் மகேந்திர பாண்டியன், நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். பொருளாளர், ஆடிட்டர் விஜயன், நன்றி கூறினார்.

விழாவில் வத்தலக்குண்டு பகுதியில், சிறப்புடன் பணியாற்றி வரும், லியோனார்டு மருத்துவமனை மருத்துவர் ஜாக்லின், திண்டுக்கல், மருத்துவமனை மருத்துவர், சுகுணா, வத்தலக்குண்டு பாமா, மருத்துவமனை மருத்துவர், ஐஸ்வர்யா ஆகியோருக்கு, தாராவின் மருத்துவத்துறை விருது வழங்க ப்பட்டது. பத்திரிகைத்துறை விருது, திவ்யாவிற்கும், ஆராய்ச்சி துறை விருது, சைனி வின்சென்ட்க்கு, வழங்கப்பட்டது. சமூக சேவை விருது, அறம் அறக்கட்டளை, சாய் ஈஸ்வரிக்கு வழங்கப்பட்டது. கல்வித்துறையில், ஜெசிந்தாவிற்கும் மற்றும், நாகேஸ்வரிக்கு, வழங்கப்பட்டது. காவல்துறையில் நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலை ய காவலர், கிர்னிஷாவுக்கும், வத்தல க்குண்டு போக்குவரத்து காவல்நிலைய ஆய்வாளர், வைரமணிக்கும், வத்தலக்குண்டு காவல் நிலையம் காவலர் கற்பகத்திற்கு தாரா விருது வழங்கப்பட்டது. ஊடகத் துறையைச் சேர்ந்த சர்மிளா, மேலாண்மைத் துறையில் லியோனார்டு மருத்துவமனை கண்காணிப்பாளர் புஷ்பகுமாரிக்கும், மற்றும் மகாலட்சுமி மேல்நிலைப்பள்ளி, தலைமை ஆசிரியை, செல்வராணி அவர்களுக்கு, தாரா விருது வழங்கப்பட்டது. விவசாயத் துறையில் நிலக்கோட்டை ரேவதிக்கும், கலைத்துறையில் அமிர்தவர்ஷினி இசை நடன பள்ளியின் வேல்மணி வெங்கடேஸ்வரன் அவர்களுக்கு தாரா விருது வழங்கப்பட்டது. சமூக சேவைக்கான தாரா விருதை, பெருங்காமநல்லூர் வீரமங்கை, மாயக்காள், மகளிர் நலச்சங்கம், செல்வபிரித்தாவுக்கும், தொழில்துறைக்கான விருது மாட்டுத்தாவணி, சுப்பு மெஸ், லதாபாலசுப்பி ரமணியனுக்கு வழங்கப்பட்டது. சேவை துறைக்கான விருது, சென்ரீட்டா தொண்டு நிறுவனத்தை சேர்ந்த, துர்கா தேவிக்கு வழங்கப்பட்டது. அரசியல் துறையில் சிறப்பாக பணியாற்றிய, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், பரமேஸ்வரிமுருகனுக்கு, வழங்கப்பட்டது. செவிலியர் துறையில் சிறப்பாக பணியாற்றிய வத்தலகுண்டு அரசு மருத்துவமனை பிரவீன்பரக்கத் மற்றும் யோகேஸ்வரிக்கு தாரா விருது வழங்கப்பட்டது. பெண்களின், சாதனைகளை கொண்டாடும் இந்த நாளில், வத்தலக்குண்டு, ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்த இந்த விழா, பல பெண்களுக்கும், ஊக்கமளிக்கும் விதமாக அமைந்தது.

மதுரை சௌராஷ்ட்ரா கல்லூரியில் இன்று நடைபெற்ற சௌராஷ்ட்ர ரத்னா C.S.ராமாச்சாரின் திருஉருவ சிலை திறப்பு விழாவில் தெற்கு சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினர் முனைவர் S. S. சரவணன் கலந்துகொண்டு சிறப்பு செய்தார்கள்.

# ஏர் ஹாரன்கள் பயன்படுத்திய தனியார் பேருந்துக்கு அபராதம்: மதுரையில் போக்குவரத்துக் காவல் துறையினர் அதிரடி நடவடிக்கை

மதுரை, மார்ச்.13 –

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஏர்ஹாரன்களை பயன்படுத்தினால் அபராதம் விதிக்கப்படும் என வட்டாரப் போக்குவரத்து துறை எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மதுரை காளவாசல், மா ட் டு த் தா வ ணி , சிந்தாமணி ரிங் ரோடு ஆகிய பகுதிகளில் மதுரை மாநகரப்போக்கு காவல் துறையுடன் இணைந்து ஆர். டி.ஓ வாகன சோதனையில் ஈடுபட்டனர். இதில் காளவாசல் பகுதியில் தனியார் பேருந்து அதிக ஏர் ஹாரன் சத்தத்துடன் வந்ததால் அந்தப் பேருந்து நிறுத்தி சோதனையில் ஈடுபட்ட போது தடை செய்யப்பட்ட ஏர் ஹாரன் இருந்தது தெரிய வந்தது. அந்தப் பேருந்தில் இருந்த ஏர் ஹாரன்கள் அகற்றப்பட்டு அபராதமும் விதிக்க ப்பட்டது. மேலும் சோதனையில் தனியார் லாரிகள் பஸ்கள் சோதனை நடத்தப்பட்டது. இதில் காளவாசலில் 12 வாகனங்களும், சிந்தாமணியில் 15 வாகன ங்களும், மாட்டுத்தா வணியில் 10, வாகனங்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. சோதனையின் போது காளவாசல் பகுதியில் போக்கு வரத்து ஆய்வாளர்கள் தங்கமணி, நந்தகுமார், பூர்ணகிருஷ்ணன், போக்குவரத்து துறை மோட்டார் வாகன இன்ஸ்பெக்டர் செல்வம், தெற்கு ஆர்டிஓ போக்குவரத்து ஆய்வாளர்கள் சுரேஷ் ஷோபனா, அவனியாபுரம் போக்குவரத்து ஆய்வாளர்கள் தங்கபாண்டியன், ரமேஷ் குமார் கார்த்திக், ஆகியோர் சோதனையில் ஈடுபட்டனர்.



# பகவதி அம்மன் கோவில் திருவிழா

நத்தம், மார்ச்.13–

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோவில்பட்டி கீழத்தெரு பகவதி அம்மன் கோவிலில் திருவிழா நடந்தது. இதையொட்டி கடந்த 2ம் தேதி சந்தனக்கருப்பு சுவாமி கோவிலிலிருந்து கரந்தமலை கன்னிமார் தீர்த்தம் மேளதாளம் முழங்க கோவிலுக்கு அழைத்து வரப்பட்டு திருவிழா தொடங்கியது. பின்னர் 9ம் தேதி இரவு கரகம் ஊர்வலமாக கோவிலுக்கு அழைத்து வரப்பட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. தொடர்ந்து பக்தர்கள் அக்கினிசட்டி, பால்குடம்,சந்தனகுடம், கிடாய்கள் வெட்டுதல் உள்ளிட்ட பல்வேறு நேர்த்திக்கடன்களை செலுத்தினர். பின்னர் நேற்று காலை அதிர்வேட்டுக்களுடன் கரகம் ஊர்வலமாக இருப்பிடம் போய் சேர்ந்தது.இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கீழத்தெரு பொதுமக்கள் செய்திருந்தனர்.

HDFC BANK
We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎப்சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பாரேல் (மேற்கு), மும்பை 400 013 மற்றும் அதன் அலுவலகம் ஒன்று உள்ளது

ரீடெய்ல் போர்ட்போலியோ மானேஜ்மெண்ட், ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட், 1வது தளம், ஐ–திங்க் டெக்னோ வளாகம், கஞ்சூர்மார்க் (கிழக்கு), மும்பை 400042.

## ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்கள் விற்பனை அறிவிப்பு மற்றும் பொது அறிவிப்பு

பத்திரங்களுக்கு எதிரான கடன்/ஓவர் டிராப்ட்டின் தன்மையில் கடன் வசதிகளைப் பெறுவதற்காக, வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்பனை செய்வது குறித்து ஹெச்டிஎப்சி வங்கி லிமிடெட்டின் ("வங்கி") கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் விதிமுறைகளின்படி நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்துவதில் கடன்தாரர்கள் தொடர்ந்து தவறியதன் காரணமாக, கீழேயுள்ள கடன் கணக்குகள் கடனற்ற நிலையில் உள்ளன. இந்த கடன் வாங்குபவர்களுக்கு வங்கி கீழே குறிப்பிடப்பட்ட தேதியில் இறுதி விற்பனை அறிவிப்பு உட்பட பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது, வங்கி உறுதிமொழியை செயல்படுத்தி, கடன்தாரருக்கு கீழே உள்ள கணக்குகளில் உள்ள நிலுவைத் தொகையை முழுவதுமாக திருப்பிச் செலுத்த 7 நாட்கள் அவகாசம் வழங்கியது, தவறினால், இது தொடர்பாக மேலும் அறிவிப்பை வெளியிடாமல், அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்க வங்கிக்கு சுதந்திரம் உள்ளது.

கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையை புறக்கணித்தனர் மற்றும் செலுத்தத் தவறி விட்டனர், எனவே, கடன் ஒப்பந்தத்தின் கீழ் வங்கி அதன் உரிமைகளைப் பயன்படுத்துவதன் மூலம், 20 மார்ச், 2025 அன்று அல்லது அதற்குப் பிறகு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்காக பத்திரங்களை விற்க/ அப்புறப்படுத்த முடிவு செய்துள்ளது. எந்த நேரத்திலும், பங்குச் சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் காரணமாக, அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந்தால், மார்ஜின் தேவையில் மேலும் குறைபாட்டை உருவாக்கினால் பின்னர் வங்கி அதன் விருப்பத்தின் பேரில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை ஒரு (1) காலண்டர் நாளுக்குள், இது தொடர்பாக எந்த அறிவிப்பும் இல்லாமல் விற்கும் என்று கடன்தாரர்களுக்கு மேலும் அறிவிக்கப்படுகிறது. அடமான பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை சரிசெய்த பிறகும் மீதமுள்ள நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்த கடன்தாரர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

| வ. எண். | கடன் கணக்கு எண் | கடன்தாரர் பெயர் | 6 மார்ச், 2025 அன்று செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை | விற்பனை அறிவிப்பு தேதி |
|---|---|---|---|---|
| 1 | XXXX0326 | சுனில் குமார் மேத்தா | 164.78 | 11-03-2025 |
| 2 | XXXX8655 | கே ஆர் கீதா ரமணி | 7,08,775.33 | 11-03-2025 |
| 3 | XXXX2365 | கே சுஜாதா | 67.93 | 11-03-2025 |
| 4 | XXXX2100 | ஆர் புனிதா | 99,802.64 | 11-03-2025 |
| 5 | XXXX6876 | ஜே வைசாலி | 2,22,429.60 | 06-03-2025 |
| 6 | XXXX4200 | கிருத்திகா ஜி | 2,23,901.00 | 06-03-2025 |
| 7 | XXXX4502 | மாளவிகா ஜெயராம் | 3,84,835.48 | 06-03-2025 |
| 8 | XXXX5404 | கௌசல்யா கவுர் | 99,815.84 | 11-03-2025 |
| 9 | XXXX9422 | கே கே ராமச்சந்திரன் | 9,64,902.00 | 11-03-2025 |
| 10 | XXXX7759 | கே மாதவன் | 9,92,616.82 | 11-03-2025 |
| 11 | XXXX1388 | செல்வம் யாமினி | 11,38,873.82 | 06-03-2025 |
| 12 | XXXX8511 | பார்வதி | 48,932.82 | 06-03-2025 |
| 13 | XXXX1061 | கே ஸ்ரீகாயத்திரி | 19,76,076.13 | 11-03-2025 |
| 14 | XXXX2700 | ஜே ராஜதுரை | 4,14,777.88 | 11-03-2025 |

நாள் : 13.03.2025
இடம் : தமிழ்நாடு

ஒப்பம்/–
ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்

# பின்னி லிமிடெட்

CIN: L17111TN1969PLC005736

பதிவு அலுவலகம் : 1, குக்ஸ் ரோடு, பெரம்பூர், சென்னை - 600 012. தொலைபேசி : 044 - 2662 1053; தொலைநகல் : 044 - 2662 1056

மின்னஞ்சல் : liaison@binnyltd.in இணையதளம் : www.binnyltd.in

## காணொளி காட்சி ("VC") / பிற ஒலி ஒளி சாதனங்கள் ("OAVM") மூலம் மின்வாக்களிப்பு தகவல் மற்றும் புத்தகத்தை மூடும் தேதிகளுக்காக நடத்தப்படும் நிறுவனத்தின் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தை கூட்டியது பற்றிய தகவலுக்கான அறிவிப்பு

பின்னி லிமிடெட் (நிறுவனம்) கூட்டிய கூடுதல் சாதாரண பொதுக் கூட்டம் 2025 **ஏப்ரல் 07ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு** நடைபெற உள்ளது என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 8, 2020, 17/2020 தேதியிட்ட 13 ஏப்ரல், 2020 மற்றும் 20/2020 ஜனவரி 5, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020க்கு இணங்க காணொளி காட்சி (VC) / பிற ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் 2021, 8 டிசம்பர் 2021, 14 டிசம்பர் 2021, 5 மே 2022, 28 டிசம்பர் 2022, 25 செப்டம்பர் 2023, 09/2024 தேதியிட்ட செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் ('MCA') மற்றும் பயன்பாட்டு விதிகள் நிறுவனங்கள் சட்டம், 2013 ('சட்டம்') மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் SEBI (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015 ('SEBI பட்டியல் விதிமுறைகள்') மற்றும் SEBI அவ்வப்போது வெளியிடும் பிற சுற்றறிக்கைகள், அமைக்கப்பட்டுள்ளபடி சாதாரண வணிகங்களை பரிவர்த்தனை செய்ய EGMன் மார்ச் 6, 2025 தேதியிட்ட அறிவிப்பில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் சட்டத்தின் பிரிவு 103ன் கீழ் கோரம் கணக்கிடும் நோக்கத்திற்காக VC/OAVM மூலம் EGM கனக்கிடப்படும்.

எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் அல்லது அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்) ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது.

**தொலைதூர மின்னணு வாக்களிப்பு:**

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 108ன் மற்றும் நிறுவனங்களின் திருத்த விதிகள், 2015ன் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதி 20 மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறை 2015-ன் ஒழுங்குமுறை 44 ஆகியவற்றுக்கு இணங்க, நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு, CDSL வழங்கும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு சேவைகள் மூலம் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வணிகங்களுக்கும் மின்னணு வழிமுறைகள் மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தில் (EGM) வாக்களிக்கும் உரிமையை வழங்குகிறது. தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதிக்கான விரிவான வழிமுறைகள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் உள்ளன.

நிறுவனங்கள் சட்டம் மற்றும் பிற விதிகளின்படி விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

1. தொலைதூர மின்னணு -வாக்களிப்புக்கான கட்–ஆஃப் தேதி **திங்கட்கிழமை, 31மார்ச், 20254** ஆகும்.
2. மின்னணு வாக்களிப்பு காலம் : மின்னணு வாக்குப்பதிவு 04 **ஏப்ரல், 2025 அன்று காலை 9.00 மணிக்குத்** தொடங்கும் மற்றும் **ஏப்ரல் 06, 2025 அன்று மாலை 5.00 மணிக்கு** முடிவடைகிறது. மேலே குறிப்பிடப்பட்ட நேரம் மற்றும் தேதிக்கு அப்பால் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படாது என்பதை நினைவில் கொள்ளவும்.
3. கூடுதல் சாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு பங்குகளைப் பெற்று, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்–ஆஃப் தேதியின்படி அதாவது 31 மார்ச், 2025 அன்று பங்குகளை வைத்திருக்கும் நபர்கள். கூடுதல் சாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ள தொலைதூர மின்னணு வாக்களிப்பு வழிமுறைகள் மற்றும் செயல்முறையைப் பின்பற்றி வாக்களிக்கலாம்.
4. கூடுதல் சாதாரண பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளத்திலும் www.binnyltd.in CDSL-ன் இணையதளத்திலும் www.evotingindia.com கிடைக்கும்.
5. உறுப்பினர்களின் பதிவேட்டில் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில், கட்–ஆஃப் தேதியில் பெயர் இடம் பெற்றுள்ள நபர் மட்டுமே, தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் அசாதாரண பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் வசதியைப் பெற தகுதியுடையவர். எவ்வாறாயினும், அந்த நபர் ஏற்கனவே CDSL-ல் தொலைதூர மின்னணு வாக்களிப்புக்காக பதிவு செய்திருந்தால், ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை வாக்களிக்கப் பயன்படுத்தலாம்..
6. VC/OAVM வசதி மூலம் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள், தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தங்கள் வாக்குகளைச் செலுத்தாதவர்கள் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்க முடியும்.
7. தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள், VC/OAVM வசதி மூலம் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்கத் தகுதி பெற மாட்டார்கள்.
8. மின்னணு வாக்குப்பதிவு, VC/OAVM வசதி மூலம் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வது மற்றும் பங்குதாரர்களால் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்வது போன்ற நடைமுறைகள் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. இது நிறுவனத்தின் இணையதளத்தில் கிடைக்கிறது: www.binnyltd.in, CDSLன் இணையதளம் www.evotingindia.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளமான பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.comலும் பார்வையிடலாம்.
9. CDSL மின்னணு வாக்களிப்பு முறை மூலம் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வது மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால், www.evotingindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

பின்னி லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
சத்யநாராயணன் பாலகிருஷ்ணன்
முழு நேர இயக்குனர்
DIN: 06620068

இடம் : சென்னை
தேதி : 12.03.2025

Protium

# புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்

(முன்னர் குரோத் சோர்ஸ் பைனான்ஷியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்)

பதிவு அலுவலகம்: நிர்லான் நாலெட்ஜ் பார்க் (NKP) B– 2, ஏழாவது தளம், பஹாடி கிராமம், ஆப். மேற்கு விரைவு நெடுஞ்சாலை, காமா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோரேகான் (கி), மும்பை, மகாராஷ்டிரா 400063

## அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்று பொது மக்களுக்கும் பொதுவாகவும், கடன்தாரர் / உடன் கடன்தாரர் / அடமானதாரருக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. அந்த சொத்து புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கப்பூர்வ சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது (இனிமேல் புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் என குறிப்பிடப்படும்). ஈடுபெற்ற சொத்துக்கள் மின்னணு ஏலத்தின் மூலம் "எங்கே உள்ளதோ அங்கேயே", " எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எந்த மாற்றமில்லாமல்" என்ற அடிப்படையில் விற்கப்படும். http://bankauctions.in/ என்ற இணையதளம் மூலம் பொது மின்னணு ஏலத்தை நடத்த உள்ளோம் என்று இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

| 1.கணக்கு எண் 2.கடன்தாரர், உடன் கடன்தாரர் 3. அடமானதாரர் பெயர் | 4. கோரிக்கை அறிவிப்பு தேதி 5. 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பின்படி தொகை 6. அடையாள சுவாதீனத் தேதி 7. அன்றைய தேதியிலான தொகை | 8. சொத்து/சொத்துகள் குறித்த விவரம் | 9. ரிசர்வ் விலை 10.டேவணித் தொகை டெபாசிட் 11. ஏல அதிகரிப்பு தொகை (ரூபாயில்) | 12. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், 13. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 14. ஆய்வுத் தேதி |
|---|---|---|---|---|
| 1. GS040EEL467741, 2.(a) பொன்வேல் பயோ எனர்ஜி & பொன்வெல் டிரேடர்ஸ் சார்பில் அதன் உரிமையாளர் ராம சோமசுந்தரம் எல்லம்மாள் (b) அல்லூர் மேரி ஏஜென்ஸ், (c) ராமசாமி பொன்னு ஸ்ரீசங்கர விக்ரமராஜ், (d) சோமசுந்தரம் எல்லம்மாள் (e) பொன்வேல் எண்டர்பிரைசஸ் அதன் சார்பாக உரிமையாளர் அல்லூர் மேரி ஏஜென்ஸ். அனைவரது முகவரி: 3/159 6, Nh45B, மதுரை முதல் தூத்துக்குடி மெயின் சாலை, மேலகரந்தை, தூத்துக்குடி, விளாத்திகுளம், தமிழ்நாடு 628904. மேலும், ச. எண். 667/1, மேலகரந்தை கிராமம், மேலகரந்தை கிராம ஊராட்சி, புதூர் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை பதிவு மாவட்டம். எட்டயபுரம் சார் பதிவு மாவட்டம், மேலும், 82A தேவா டெக்ஸ் காலனி, காந்தி நகர் அருப்புக்கோட்டை, விருதுநகர், அருப்புக்கோட்டை, தமிழ்நாடு 626101 | 4. தேதி: 14 ஆகஸ்ட் 2024, 5. ஆகஸ்ட் 03,2024 அன்று ரூ.3932227.86/- (ரூபாய் முப்பத்தொன்பது லட்சத்து முப்பத்தி ரெண்டாயிரத்து இருநூற்று இருபத்தேழு மற்றும் எண்பத்தாறு பைசா மட்டும்) மற்றும் ஆகஸ்ட் 03,2024 முதல் 18% கூடுதல் வட்டியுடன் எங்கள் அறிவிப்பில் கோரப்பட்டுள்ளபடி முழுத் தொகையும் பிற கட்டணங்களுடன் செலுத்தும் வரை, இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து 60 நாட்கள் சட்டப்பூர்வ காலத்திற்குள், 6. 25 அக்டோபர் 2024, 7. மார்ச் 10, 2025 அன்று ரூ.43,06,737.35/- (நாற்பத்து மூன்று லட்சத்து ஆறாயிரத்து எழுநூற்று முப்பத்தேழு மற்றும் முப்பத்தைந்து பைசா மட்டும்) | சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், நிலம் மற்றும் கட்டிடம். சர்வே எண்.667/1, மேலகரந்தை கிராமம், மேலகரந்தை கிராம ஊராட்சி, புதூர் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், எட்டயபுரம் சார் பதிவு அலுவலகத்திற்கு உட்பட்ட 1.09 ஏக்கர் நிலம். 1.09 ஏக்கர் நிலத்திற்கான எல்லைகள் : வடக்கு : ச.எண். 700 புஞ்சை நிலம், தெற்கு: ச.எண். 667/2 புஞ்சை நிலம், கிழக்கு: சாலை, மேற்கு: ச.எண். 699 புஞ்சை நிலம் | 9. ரூ.43,00,000/- (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சம் மட்டும்) 10. ரூ.4,30,000/- (ரூபாய் நான்கு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 11. (ஏல அதிகரிப்பு மதிப்பு: ரூ.5,000/) | 12. 11 ஏப்ரல் 2025 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்) 13. 10 ஏப்ரல் 2025 அன்று மாலை 5:00 மணி வரை. 14. 26 மார்ச் 2025 அன்று காலை 11:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை |

1. ஆர்வமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் / ஏலதாரர்களும் https://bankauctions.in & https://protium.co.in/ என்ற இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்கள், உதவி, நடைமுறை மற்றும் மின்னணு ஏலம் குறித்த ஆன்லைன் பயிற்சிக்கு, வருங்கால ஏலதாரர்கள் திரு. நிதேஷ் டி பவார் அவர்களை தொலைபேசி எண். 8142000725/ 8142000066.email id: nitesh@bankauctions.in / info@bankauctions.in-ல் தொடர்பு கொள்ளலாம்.

• விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, மின்னணு ஏலத்தில் பங்கேற்க https://bankauctions.in மற்றும் https://protium.co.in/ ஐப் பார்க்கவும்.

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8(6)/ விதி 9 (1)ன் கீழ் இது ஒரு சட்டப்பூர்வ 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு ஆகும்,**

தேதி : 13.03.2025
இடம் : விளாத்திகுளம், தமிழ்நாடு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
புரோடியம் ஃபைனான்ஸ் லிமிடெட்